ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2369/26 - 2024 පෙබරවාරි මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.02.01
*2369/26 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 4/2011*
*பணிப்புரை இலக்கம் - 93*

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

*10(1)(ஆ)(ii) ஆம் பிரிவின் கீழான விசேட பணிப்புரை*

*2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் தவிசாளர் சாந்த நிரியெல்ல ஆகிய நான், நுகர்வோர் பாதுகாப்பிற்காக-*

(அ) (i) இதற்கான அட்டவணையின் நிரல் 1 இல் குறித்துரைக்கப்பட்ட பாணின் ஏதேனும் வகையை உற்பத்தி செய்தல், பொதியிடல், களஞ்சியப்படுத்தல் அல்லது மொத்த விற்பனை செய்தலில் ஈடுபடுகின்ற எவரேனும் உற்பத்தியாளர் ; அல்லது

(ii) இதற்கான அட்டவணையின் நிரல் 1 இல் குறித்துரைக்கப்பட்ட பாணின் ஏதேனும் வகையை சில்லறை விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக முனைதல் அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்துவதில் ஈடுபடுகின்ற எவரேனும் வியாபாரி,

விடயத்துக்கேற்ப, அவ்வட்டவணையின் நிரல் 2 இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட நியம நிறையினைக் கொண்டிருக்கின்ற உற்பத்தி செய்யப்பட்ட, பொதியிடப்பட்ட, களஞ்சியப்படுத்தப்பட்ட, விற்பனைக்காக முனையப்பட்ட, விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்ட அல்லது சில்லறையாக அல்லது மொத்தமாக விற்கப்பட்ட பாணின் அத்தகைய ஒவ்வொரு வகையையும் உறுதிப்படுத்துதல் வேண்டும் ;

1A - PG 6634 — 81 (2024/02)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) இதற்கான அட்டவணையின் நிரல் 1 இல் குறித்துரைக்கப்பட்ட பாணின் ஒவ்வொரு வகைக்குமான அனுமதிக்கத்தக்க குறைவானது அவ்வட்டவணையின் நிரல் 3 இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) வியாபாரி ஒவ்வொருவரும் விற்பனைக்காக முனையப்பட்ட அல்லது காட்சிப்படுத்தப்பட்ட ஏதேனும் பாணின் நிறையினை தெளிவாகவும் துலாம்பரமாகவும் காட்சிப்படுத்தல் வேண்டும்.

இவ்விசேட பணிப்புரையின் நோக்கங்களுக்காக.-

"அனுமதிக்கத்தக்க குறைவு" என்பது, அனுமதிக்கப்பட்ட நியம நிறையினை விட குறைந்த உள்ளீடு எனப் பொருள்படும்.

**அட்டவணை**

| பாணின் வகை | பாணின் நியம நிறை (கிராம்) | அனுமதிக்கத்தக்க குறைவு (கிராம்) |
|---|---|---|
| பாண் ஒன்று | 450 | 13.5 |
| அரை பாண் ஒன்று | 225 | 09 |

தவிசாளர்,
பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை.

கொழும்பு,
2024, பெப்புருவரி 01.

EOG 01-0247

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.